DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : STC 12/2024 |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : முத்துலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 27.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 27th February 2026.

**எதிரிகள் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. சாட்சி வீடியோ கான்பரன்சிங்கின் மூலம் ஆஜராகி அளித்த சாட்சியத்தை இந்நீதிமன்றம் பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தென்காசி மாவட்ட தனிப்பிரிவு குற்ற புலானய்வு துறை ஆய்வாளராக பணிபுரிநது வருகிறேன். இதற்கு முன்பு திருவேங்கடம் காவல்நிலைய குற்ற எண்.159/2015 பிரிவு 294(பி), 341, 323 இ.த.ச வழக்கின் நகலை பெற்று அந்த வழக்கை ஏற்கனவே விசாரணை செய்த உதவி ஆய்வாளர் ஜெகன் அவர்கள் விசாரணை செய்த சாட்சிகளை விசாரித்த போது அவரிடம் கூறிய விபரங்களை என்னிடமும் கூறியதால் அவர்களது வாக்குமூலங்களை மீண்டும் நான் பதிவு சயெ்யவில்லை. மேலும் இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி 1 நடராஜன் சிகிச்சை அளித்த மருத்துவர் உமா அவர்களிடமிருந்து 14.12.2015 ம் தேதி மருத்து சான்றிதழை பெற்று

மேற்படி மருத்துவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். எனது விசாரணையில், சம்பவம் உண்மையென தெரியவந்ததால், மேற்படி எதிரிகள் மணிகண்டன் மற்றும் பால்ராஜ் மீது 14.12.2015 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கையில் சம்பவமானது 23.10.2015 ம் தேதி 8 மணிக்கு நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் பற்றி காவல்நிலையத்திற்கு 24.10.2015 ம் தேதி 18.30 மணிக்கு கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதிலிருந்து ஒருநாள் காலதாமதமாக வழக்கு பதிவு செய்யப்பட்டதற்கான காரணம் முதல் தகவல் அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்காது. சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் எத்தனை கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சுமார் 2.கிமீ தொலைவில் உள்ளது. சம்பவ நடந்த இடத்திலிருந்து காவல்நிலையத்திற்க 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். சாட்சி நடராஜன் போலீசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் எதிரிகள் தன்னை எந்த இடத்தில் வைத்து வழிமறித்து அடித்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்தில் நடராஜனின் மனைவியை தவிர்த்து வேறு பொதுமக்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் சாட்சி நடராஜனை வழிமறித்ததாக சொல்லப்படும் இடம் ஒரு விசாலமான காட்டுப்பகுதி என்றால் எதிரிகள் சாட்சி நடராஜனை வழிமறித்ததாக சொல்லப்படும் இடம் ஒரு விவசாய நிலம். எதிரிகள் சாட்சி நடராஜனை வழிமறித்ததாக சொல்லப்படும் இடம் நடராஜனுக்கு சொந்தமானது என்பதை காண்பிக்கும் ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கின் சம்பவத்திற்கு முன்பு நடராஜனுக்கும் மணிகண்டனுக்கும் இடையில் கோவில் பிரச்சனை சம்பந்தமாக ஏற்கனவே முன்விரோதம் உண்டு என்று எனது விசாரணையில் துலங்குமா என்றால் துலங்காது. நான் கூறிய நாள் மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அரசு தரப்பு பட்டியல் சாட்சிகளை நான் மறு விசாரணை செய்யவில்லை என்றாலும், காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை நான் விசாரிக்கவில்லை என்றாலும், காயச்சான்றிதழ் பெறவில்லை

என்றாலும், எனது விசாரணை ஒருதலைபட்சமானது என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. \

**மறுவிசாரணை இல்லை.**